**புதுக்கோட்டை மாவட்டம்**

**அறிவிக்கை(Notification)**

**சமையல் உதவியாளர் காலிப் பணியிடங்களுக்கு நேரடி நியமனம்**

ந.க.வி5/2453/2015, நாள்:28 .07.2017

புதுக்கோட்டை மாவட்டத்தின் கீழ் இயங்கும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்ட பள்ளிச் சத்துணவு மையங்களில் ஏற்பட்டுள்ள 327 சமையல் உதவியாளர் காலிப் பணியிடங்களுக்கு ரூ.950-2000 தரஊதியம் ரூ.200 என்ற ஊதிய விகிதத்தின்கீழ் நேரடி நியமனம் மூலம் நிரப்பிட பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்க்கப்படுகின்றன.

**ஊராட்சி ஒன்றியங்களில் காலிப்பணியிட விவரம்:-**

| வ. எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | சமையல் உதவியாளர் காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அன்னவாசல் | 34 |
| 2. | அரிமளம் | 13 |
| 3. | அறந்தாங்கி | 34 |
| 4. | ஆவுடையார்கோவில் | 8 |
| 5. | கந்தர்வக்கோட்டை | 19 |
| 6. | கறம்பக்குடி | 34 |
| 7. | குன்றாண்டார் கோவில் | 23 |
| 8. | மணமேல்குடி | 16 |
| 9. | பொன்னமராவதி | 32 |
| 10. | புதுக்கோட்டை | 42 |
| 11. | திருமயம் | 7 |
| 12. | திருவரங்குளம் | 37 |
| 13. | விராலிமலை | 16 |
| 14. | புதுக்கோட்டை நகராட்சி | 10 |
| 15. | அறந்தாங்கி நகராட்சி | 2 |
| **கூடுதல்** | | 327 |

**இனசுழற்சி வாரியான காலிப்பணியிட விவரம்**

| வ. எண் | வகுப்பினர் | காலிப்பணியிட எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஆதி திராவிடர்(அருந்ததியினர்) | 9 |
| 2. | ஆதி திராவிடர் | 48 |
| 3. | பழங்குடியினர் | 3 |
| 4. | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | 63 |
| 5. | பிற்படுத்தப்பட்டோர் மூஸ்லீம்கள் | 11 |
| 6. | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட மூஸ்லீம்கள் தவிர) | 86 |
| 7. | பொதுப்போட்டி | 98 |
| 8. | சிறுபான்மையினர் நலப்பள்ளி இனசுழற்சியிலிருந்து விதி விலக்களிக்கப்பட்டது | 9 |
| **கூடுதல்** | | **327** |

## தகுதிகள்

| வ.எ | இனம் | வயது | கல்வித் தகுதி | தூரச்சுற்றளவு |
|---|---|---|---|---|
| 1. | பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்ட பிரிவினர் (SC) | 01.07.2017 அன்று 21 வயது பூர்த்தி அடைந்தும் 40 வயதிற்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும் | ஐந்தாம் வகுப்பு தேர்ச்சி அல்லது தேர்ச்சி பெறாதவர் | நியமன பணியிடத்திற்கும் விண்ணப்பதாரர் குடியிருப்புக்கும் இடையே உள்ள தூரம் 3.கி.மீ க்குள் இருக்க வேண்டும். |
| 2. | பழங்குடியினர் | 01.07.2017 அன்று 18 வயது பூர்த்தி அடைந்தும் 40 வயதிற்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும் | எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும் | |

விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோர் 20 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதிற்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். மேற்படி பணியிடங்கள் அரசு விதிமுறைகளின் படியும் மாண்புமிகு நீதிமன்ற ஆணைக்கு உட்பட்டும் நிரப்பப்படும். கல்வித்தகுதி, இருப்பிடம், சாதி, விதவை கணவரால் கைவிடப்பட்டோர் மற்றும் இதர முன்னுரிமை சான்றிக்கான ஆதாரம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும். ஏற்கனவே பணியில் இருப்பவர்கள் மேற்காணும் பதவிகளுக்கான அனைத்து தகுதிகளும் பெற்று இருப்பின் சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்/நகராட்சி ஆணையருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்துடன் கல்வித்தகுதி, இருப்பிடம், சாதி, கணவரால் கைவிடப்பட்டோர் போன்ற சான்றிதழ்களின் நகல்களை இணைத்து தொடர்புடைய ஊராட்சி ஒன்றியங்களில் **22.08.2017க்குள்** விண்ணப்பிக்க வேண்டும். இதற்கு பின் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. காலிப்பணியிட விவரங்களும், இனசுழற்சி விவரங்களும் மற்றும் விண்ணப்ப படிவமும் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் **www.pudukkottai.nic.in** என்ற இனையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

ஒம்/சு.கணேஷ்,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
புதுக்கோட்டை

/உத்தரவுப்படி/

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர்(சத்துணவு), புதுக்கோட்டை